DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : DVOP 2/2022

Petitioner Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வித்யா | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ராஜேஸ் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act

Examination Date / சாட்சி விசாரணை தேதி :– 19 /05/2023

1ம் எதிர்மனுதாரர் ஆஜர்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

1)நான் பண்ணிரெண்டாம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 2015ம் வருடம் ஜூன் மாதம் திருமணம் நடந்தது. 2ம் எதிர்மனுதாரர் எனது மாமியார். 2ம் எதிர்மனுதாரரான எனது மாமியாருக்கு 65 முதல் 70 வயது இருக்கும். எனக்கு திருமணம் நடக்கும் போதே எனது மாமனார் உயிருடன் இல்லை. எனது கணவருடன் உடன்பிறந்தவர்களும் யாரும் இல்லை.

2) 1ம் எதிர்மனுதாரருக்கும் எனக்கும் இடையே எத்தனை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் இரண்டு வழக்கு உள்ளது. திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தல் எனது கணவரால் தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்து வழக்கும், ஒட்டன்சத்திரம் சார்பு நீதிமன்றத்தில் கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று நான் தாக்கல் செய்த வழக்கும் நிலுவையில் உள்ளது. இந்த வழக்குடன் சேர்தது மொத்தம் மூன்று வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3) மூன்று வழக்குகளிலும் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியும். இந்த வழக்கில் எனக்கு என்ன சொத்து மற்றும் கடன் உள்ளது என்றும் எனது கணவருக்கு என்ன சொத்து மற்றும் கடன் உள்ளது என்பதை பொறுத்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) 1ம் எதிர்மனுதாரர் தான் முதன் முதலில் திருவண்ணாமலை மாவட்ட நீதிமன்றத்தில் என் மீது விவாகரத்து வழக்கு தொடர்ந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு பிறகு தான் பழனி நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ கோரி நான் மனு செய்தேன் என்றால் சரிதான்.

5) அதன்பிறகு தான் சமூக நலத்துறை மூலமாக மனு கொடுத்து இந்த வழக்கை நான் தொடர்ந்துள்ளேன் என்றால் சரிதான். நான் விவரம் கோரி மனுவை படித்து பார்த்த பிறகு தான் சமூக நலத்துறை அலுவலரிடம் மனுவில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

6) மனுதாரர்களுக்கு குழந்தைகள் இருப்பது பற்றிய விவரம் என்ற இடத்தில் ஆறு குழந்தைகள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் ஒரு குழந்தை என்று கூறினேன். 1ம் எதிர்மனுதாரர் எந்த தேதியில் யார் முன்னிலையில் எந்த இடத்தில் என்னை அவதூறாக பேசினார் என்று பாதுகாப்பு அலுவலரிடமோ மனுவிலோ நான் கூறவில்லை என்றால் சரிதான். சாட்சி தன்னிச்சையாக 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் தன்னை அவதூறாக பேசியதால் அதற்கு சாட்சி இல்லை என்று கூறுகிறார்.

7) குறிப்பிட்டு என்ன வார்த்தை என்னை அவதூறாக பேசினார் என்று நான் மனுவில் கூறவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் எனது மகனுக்கும் ஒட்டன்சத்திரம் முகவரிக்கும் தனியாக குடும்ப அட்டை பெற்று இருக்கிறேன் என்றால் சரிதான்.அவர் குடும்ப அட்டையை தரமறுத்ததால் நான் தனியாக வாங்கினேன்.

8) மனுவில் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து குடும்ப அட்டையை பெற்றுத்தருமாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். நான் கேட்டேன் அவர் தரமறுத்ததால் மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்றத்தில் உத்தரவுப்படி குடும்ப அட்டை தனியாக பெற்றேன். எனது மகனை பள்ளியில் சேர்ப்பதற்காக குடும்ப அட்டை பெற்றேன்.

9) என் கணவரை விட்டு பிரிந்து வாழ வேண்டும் என்பதற்காகவே நான் தனியாக குடும்ப அட்டையை பெற்றேன் என்றால் சரியல்ல. பாதுகாப்பு அலுவலரிடம் நான் கொடுத்த விண்ணப்பத்தில் குடும்ப வன்முறையிலிருந்து பெண்கள் பாதுகாப்பு சட்ட பிரிவுகள் 18,19,20ன் படி கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு எதுவுமே கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

10) குடும்ப வன்முறையிலிருந்து பெண்கள் பாதுகாப்பு சட்ட பிரிவு 20ன் கீழ் ஊதிய இழப்பிற்காக ரூபாய் 25,000 கோரி இருக்கிறேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரிடம் ஊதிய இழப்பிற்காக ரூபாய 25,000 கோரியிருப்பது சட்டப்படியானதல்ல என்று சொன்னால் சரியல்ல. ரூபாய் முப்பது லட்சம் இழப்பீடாக கோரியிருப்பது சட்டப்படியானதல்ல என்றால் சரியல்ல. மனுவில் பெற்றோர் தரப்பில் 17 பவுன் நகையும் இரண்டு லட்சம் ரொக்கமாக கொடுத்ததாகவும் 1ம் எதிர்மனுதாரருககும் 5 பவுன் நகை கொடுத்ததாகவும் சொன்னால் சரிதான். நான் சேர்ந்து வாழ சொல்லி சார்பு நீதிமன்றத்தில் தாக்ல செய்துள்ள மனுவில் 22 பவுன் எனக்கு திருமணத்தின் போது கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் அந்த மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு ஞாபகம் இல்லை.

11) இந்த மனுவில் 17 பவுன் நகைகள் குறித்த தனிப்பட்ட விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு 17 பவுன் நகை கொடுத்தற்கு 1 எதிர்மனுதாரருக்கு 5 பவுன் கொடுத்தற்கு எந்தவித ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிட்டுள்ளது போல் எனக்கு எந்தவிதமான நகையும் எனக்கு திருமணத்தின் போது கொடுக்கப்படவில்லை என்பதால்தான் ஆதாரங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கொடுத்து இருக்கிறோம்.

12) குழந்தை பிறந்த போது யார் முன்னிலையில் நான்கு பவுன் கொடுக்கப்பட்டது என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மனுவில் சொன்னதுபோல் 1ம் எதிர்மனுதாரரிடம் நான்கு பவுன் கொடுக்கவில்லை என்பதால்தான் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

13) 2018ம் வருடத்திற்கு பிறகு நாங்கள் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. 2018ம் வருடத்திற்கு 1ம் எதிர்மனுதாரரிடம் சேர்நது வாழ பலமுறை முயற்சி செய்தேன் பலனிக்கவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். உறவினர் மூலமாக பேசி இரண்டு மாதங்கள் சேர்ந்து வாழுவதும் அவர் என்னை திருப்பி அனுப்புவதுமாக இருந்தார். மேற்படி சங்கதிகளை என் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

14) 1ம் எதிர்மனுதாரரிடம் யார்வைத்து சமரசம் பேசினோம் என்றும் எத்தனை முறை சேர்நது வாழ முயற்சி செய்தோம் என்றும் மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். சட்டப்படியாக சேர்ந்து வாழ்வதற்கு வழக்கறிஞர் அறிவிப்பு 1ம் எதிர்மனுதாரருக்கு நான் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

15) வரதட்சணை கேட்டதாக 1ம் எதிர்மனுதாரர் மீது நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.1,2 எதிர்மனுதாரர்கள் ஒரு போதும் வரதட்சணை கேட்கவில்லை எனறும் அதனால் தான் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கவில்ல என்றால் குடும்ப உடைந்து விடும் என்பதால் நான் சட்டப்படி நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கவில்லை. கூடுதல் வரதட்சனை கேட்டார்கள் என்று கூறியிருப்பதை தவிர வேறு எந்த குற்றச்சாட்டும் எதிர்மனுதாரர்கள் மீது எனது மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் வேறு எந்த குற்றச்சாட்டும் கூறவில்லை.

16) 2ம் எதிர்மனுதாரரான மாமியாரை பராமரிக்கவும் பாதுகாப்பதற்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் எனக்கும் கடைமை உள்ளது என்றால் சரிதான்.

(எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகேளுக்கு இணங்க குறுக்குவிசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2023.05.19 10:30:59 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 19/05/2023